# உலகப் பொதுமறை வள்ளுவம்





**பதிப்பாசிரியர்கள்**

முனைவர் த.தெய்வீகன்
முனைவர் ப.கோடித்துரை
முனைவர் ப.மணிமாறன்
முனைவர் ரெ.ஜெயந்தி
முனைவர் நா.மாலதி
முனைவர் அர.மீனா

**தொகுப்பாசிரியர்**

**உடையார்கோயில் குணா**


**உலகத் திருக்குறள் மாநாடு - 2020**
**இலங்கை**


தமிழ்த்தாய் அறக்கட்டளை வெளியீடு - 23



உலகப் பொதுமறை வள்ளுவம்
உலகத் திருக்குறள் மாநாடு - 2020 இலங்கை




முனைவர் **கோ.விசயராகவன்**
இயக்குநர், தமிழ் வளர்ச்சித்துறை (ம)
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை
தமிழ்நாடு அரசு

தஞ்சாவூர்-தமிழ்த்தாய் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் உலகத் திருக்குறள் இரண்டாவது மாநாடு இலங்கையில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் 2020-பிப்ரவரி 21,22,23-இல் நடைபெற இருப்பது மகிழ்ச்சியளிக்கிறது.

இந்த மாநாட்டை முன்னிட்டு திருக்குறள் ஆய்வுக்கட்டுரைகளை ஆய்வறிஞர்களிடம் பெற்று நூலாக வெளியிடுவது பாராட்டுதலுக்குரியது.

மாநாட்டின் பதிவாக இரண்டு திருவள்ளுவர் சிலைகளை வடிவமைத்து யாழ்ப்பாணம் உரும்பிராய் நகர பொதுவீதியில் நிறுவுவதும் விபுலானந்த அடிகளாரின் தாய் மண் காரைத்தீவில் அரச பிரதேச சபையின் முகப்பில் நிறுவுவதும் போற்றுதலுக்குரியது.

உள்ளத்தனையது உயர்வு


ISBN 978-81-909877-2-1
9 788190 987721

விலை ரூ. 250/-

# நூல் விவரம்


தலைப்பு : உலகப் பொதுமறை வள்ளுவம் (தொகுதி-4)
(உலகத் திருக்குறள் மாநாட்டு கருத்தரங்கம்)

தொகுப்பாசிரியர் : **உடையார்கோயில் குணா.**

துணை
பதிப்பாசிரியர்கள் : முனைவர் **த.தெய்வீகன்**
முனைவர் **ப.கோடித்துரை**
முனைவர் **ப.மணிமாறன்**
முனைவர் **ரெ.ஜெயந்தி**
முனைவர் **நா.மாலதி**
முனைவர் **அர.மீனா**

மொழி : தமிழ், ஆங்கிலம்

உரிமை–வெளியீடு : தமிழ்த்தாய் அறக்கட்டளை
மாரியம்மன் கோவில்,
தஞ்சாவூர்–613 501.
கைபேசி: 9443938797, 7530002454.

அளவு : டெம்மி

பக்கங்கள் : 12+340=352

விலை : ரூ.300/–

ISBN : **978-81-909877-2-1**

நூல் வடிவமைப்பு: பரிதி பதிப்பகம்,
சோலையார்பேட்டை.
வேலூர் மாவட்டம்.
கைபேசி: 8098908840, 7200693200

11. திருக்குறளில் மனிதனாகும் முறை
முனைவர். யா.சாம்ராஜ் 64

12. தெய்வநூல் உணர்த்தும் அலங்காரங்களில் -காதல் நிகழ்வுகள்
ம.சபரிநாதன் 69

13. மனத்தூய்மையும் மன அமைதியும்
மு.பொன்னுசாமி 81

14. வள்ளுவரும் தியானமும்
சகோதரி வெண்ணிலா, சென்னை 87

15. திருக்குறளின் அறிவியல் பார்வை 3
பெரணமல்லூர் சேகரன் 92

16. வள்ளுவமும், வாழ்க்கைப் பாதையும்
புனிதா செல்வராசன் 95

17. திருக்குறளில் இடம்பெறும் பொருளியல் சிந்தனைகள்
முனைவர் ஜெ.ரஞ்சனி 110

18. திருக்குறள் கூறும் மானுடப் பண்புகள்
என்.எம்.சாந்தி 115

20. திருவள்ளுவரின் அறநோக்கு
முனைவர் கடவூர் மணிமாறன் 126

21. திருக்குறள் போற்றும் வேளாண்மை
சுதா.மு 133

22. திருவள்ளுவரின் வாழ்க்கையும். அவர் ஆற்றிய பணியும்
சு.கானமூர்த்தி 138

23. திருக்குறளில் மனித நேயச் சிந்தனைகள்
முனைவர் ச.பாக்கியலஷ்மி 147

24. திருவள்ளுவர் போற்றும் அறம்
சத்தியபாரதி 152

25. திருக்குறள் இயம்பும் ஆசானின் உன்னதம்
முனைவர்.நா.சாரதாமணி 157

26. திருக்குறளில் சமுதாயச் சிந்தனைகள்
முனைவர் மா.கோபி 163

27. வள்ளுவர் காட்டும் கல்வி நெறிமுறைகள்
முனைவர்.வே.தா. தர்மராஜா 172

28. திருக்குறள் காட்டும் உயிரோம்பல்
முனைவர் க.மணிமேகலை, M.Sc., Ph.D., 177

29. திருக்குறளில் நட்பு
முனைவர். க. முத்துமாரியம்மாள் 190

30. வள்ளுவர் கூறும் வாழ்வியல் நெறிமுறைகள்
முனைவர். பு. பிரியங்கா 196

31. திருக்குறள் காட்டும் இலக்கிய விழுமியங்கள்
A.ராஜலெட்சுமி 202

32. திருக்குறளில் விருந்தோம்பல்
முனைவர். சா.கணேசன் 209

33. திருக்குறளில் நட்பு
முனைவர் சி.கலியமூர்த்தி 215

34. திருக்குறளில் உளவியல் கருத்துகள்
கா. கோவிந் 221

# திருக்குறளில் மனிதனாகும் முறை

முனைவர். யா.சாம்ராஜ்

"எல்லாப் பொருளும் இதன்பால் உள இதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால் சொல்லால்
பரந்த பாவால் என் பயன்? வள்ளுவனார்
சுரந்த பாவை அத்துணை."

(திருவள்ளுவமாலை மதுரைத் தமிழ் நாகனார்)

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் தலைசிறந்து விளங்கும் திருக்குறள், மனிதன் எப்படியும் வாழ்வது வாழ்க்கை அல்ல, மாறாக இப்படித்தான் வாழ வேண்டும் என்கின்ற தனிப்பெரும் தத்துவத்தை இம்மண்ணுக்கு அன்பளிப்பு செய்திருக்கிறது. உலக இலக்கிய வரலாற்றில் வள்ளுவரை மிஞ்சி நிற்க இதுவரையில் எவரும் பிறக்கவில்லை. இனியும் பிறக்கப் போவதுமில்லை. ஒன்றே முக்கால் அடியில் உலகை அளந்து பார்த்த பேரதிசயம் வள்ளுவப் பெருந்தகை. பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் அனைத்தும் அறத்தை அளவில்லாமல் அள்ளிக் கொடுத்திருந்தாலும், திருக்குறளுக்கு மட்டுமே தனிப்பெரும் ஒன்பது பெயர்கள் ஒன்றுகூடி இத்தரணியைத் தாலாட்டியது.

"சீரார் திருக்குறள், உத்தர
வேதம், திருவள்ளுவர்
பேரார் பொய் யாமொழி
வாயுறை வாழ்த்து,பெருந் தெய்வநூல்
ஊரார் பொதுமறை, முப்பால்



தமிழ் மறை, ஒன்பதும் நல்
காரார் கற்றுணர் செய்யுட்கு
நாமங்கள் கார்குழலே"

என்னும் பழம்பாட்டில் காணலாம். இத்தகைய சிறப்பு பெற்ற மனிதனை மனிதனாக்கப் பிறந்த இத்திருக்குறளில் மனிநேயச் சிந்தனைகள் குறித்து இக்கட்டுரை வழிக் காண்போம்.

**மனித மதிப்பீடுகள் :**

தாயின் வயிற்றிலிருந்து தரையிறங்கும் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தன் வாழ்வில் கடைபிடிக்கவேண்டிய வழிமுறைகள் ஏராளம் இருக்கின்றது. அன்பு, பணிவு, பாசம், கனிவு, பொறுமை, சாந்தம், சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுத்தல் போன்ற மனித விழுமியங்களைக் கடைபிடித்தால் மட்டுமே வாழ்வில் வெளிச்சம் பாய்ச்ச முடியும். அதற்கு கல்வி மட்டுமே இது போன்ற பண்புகளைப் பேணுவதற்கு வித்திடும். இதனை வள்ளுவப் பெருந்தகை

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக" (கல்வி : 391)

என்கிறார். இக்குறளானது கற்றுக்கொள், அதைத் தெளிவாகக் கற்றுக்கொள். அப்படியே கற்றுக் கொண்டதன்படி வழுவாது ஒழுகி நட என்கிறார். இதுவே மனிதன் மனிதனாவதற்கு நற்சான்று புரிகின்றது.

**நாவடக்கம் :**

கசடறக் கற்ற கல்வியைக் கட்டிக் காப்பாற்ற வேண்டும். அதற்குச் செயல்வடிவம் மிகவும் முக்கியமாகும். அச்செயல்பாடுகளுக்குப் பேச்சு மூலாதாரமாகத் திகழ்கின்றது. பொதுவாகக் கற்றவனெல்லாம் கரைகண்டவனல்ல. அவனுக்குள்ளும் கோபதாபங்கள் பரவிக் கிடக்கின்றது. கிராமப்புற பேச்சுவழக்குகளில் ஒரு அருமையான பழமொழி ஒன்று இருக்கிறது. 'ஒரு வார்த்தை வெல்லும், ஒரு வார்த்தைக் கொல்லும்' எவ்வளவு பெரிய மனிதனையும் தோல்வி அடையச் செய்துவிடும் அவனது நாக்கு. இதனை வள்ளுவர்,

"யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு" (அடக்கம் உடைமை : 127)

ஒருவன் எவற்றை அடக்காவிட்டாலும், அவனது நாவையாவது அடக்கியாளத் தெரிந்திருக்க வேண்டும்.

அவ்வாறு அடக்காவிடில் சொற்குற்றத்திற்கு ஆளாகி பெரிதும் துன்பப்படுவர் என்கிறார். நாவடக்காமையின் விளைவானது இன்றைய அரசியல் சூழலிலே மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது. மத ரீதியாக, சாதிய ரீதியாக, நீ பெரியவனா? நான் பெரியவனா? ஆளும் கட்சி, எதிர்க் கட்சி என ஒவ்வொருவரும் வாள் வார்த்தைகளால் காவு வாங்கும் தன்மை நடந்தேறிக் கொண்டிருக்கின்றது. நாவை வைத்து மனிதனின் இறப்பைத் தீர்மானிக்கும் சூழலை,

"தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு" (அடக்கம் உடைமை : 129)

என்னும் குறள்வழி வள்ளுவர் மெய்ப்பிக்கின்றார். அப்படியாகில் இந்த நரம்பில்லாத நாவுக்குத்தான் எவ்வளவு சக்தி அதிகம். இது ஒருபுறம் இருக்க, வள்ளுவர் ஆறறிவு கொண்ட மனிதனுக்கு, ஐந்தறிவு கொண்ட ஆமை வழிப் பாடம் நடத்துகின்றார். இதை நோக்கும்போது பகுத்தறிவு எங்கோ அடகுவைக்கப்பட்டுவிட்டது என்றே எண்ணத் தோன்றுகின்றது. இன்றையச் சூழ்நிலையில் படித்தவனாலேயே பாரதத்திற்குப் பலநூறு பாதகம் ஏற்படுகின்றது. மனிதன் மது, மாது போன்றவற்றால் கெட்டு சீரழிந்து உலகம் உமிழக் காரணமாகின்றான். இதனைக் கொண்டு,

"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்பு உடைத்து" (அடக்கம் உடைமை : 126)

என்கின்றார். ஆமைக்குத் துன்பம் வரும்போது, எவ்வாறு தனது ஐந்து உறுப்புகளையும் தன் ஓட்டினுள் அடக்கிக் காத்துக் கொள்கின்றதோ, அதே போல மனிதர்களுக்குத் துன்பம் நேரிடும்போது, உங்கள் ஐம்பொறிகளையும் அடக்கிக் காத்துக் கொள்ளுங்கள் என்கிறார். இங்கே வியப்பு யாதெனில் 'போல' எனவரும் இடம் உவமையணி ஆகும். ஆமையைப் போல் மனிதா உன்னைக் காத்துக் கொள் என்கிறார். இதன்வழி மனிதன் எவ்வளவு மட்டமானவன் என்பதை உணர முடிந்தாலும், வள்ளுவரைப் பொருத்தமட்டில் 'விழுந்து எழு' என்பதே அவரின் தாரக மந்திரமாக இருக்கின்றது.

**பொறுமை :**

மனித மதிப்பீடுகளில் பொறுமை மிக முக்கியமானது. திருமுறையாவும் மனிதனுக்கு உரைக்கும் மந்திரச்சொல், பொறுமை. இது நடைமுறைக்கு ஒத்துவருமா என்ற கேள்விக்கு,



சற்றே எல்லோராலும் யோசிக்கத் தோன்றும். ஒருவனைத் தொடர்ந்து துன்புறுத்திக் கொண்டே இருக்கும் நிலையில், துன்பத்திற்கு ஆளானவன் அமைதி காத்தானெனில், அவனுக்கு சமூகம் வழங்கும் மிகப்பெரிய பட்டம் வாழத் தகுதியற்றவன், ஆண்மையற்றவன் என பல்வேறு வசைமொழிகளைப் பகர்கின்றது. இதற்கீடாக கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்கின்றபோது அகிம்சைச் சாலைகளில் குருதி ஓடுவதைப் பார்க்க முடிகின்றது. ஆனாலும், வள்ளுவர் மனிதனை ஆற்றுப்படுத்த முற்படுகின்றார்.

"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை" (பொறை 151)

இக்குறளைச் சற்று விரிவாக நோக்கும்பொழுது, துன்பம் தரக்கூடியவன். தொடர்ந்து தொய்வின்றி துன்பம் தந்தாலும். ஒவ்வொருமுறையும் நிலத்தைப்போல பொறுமையைக் கைவிடாமல் காத்துக்கொள். இவ்வாறு ஒருவன் அடிக்க அடிக்க அதை அன்போடு ஏற்றுக் கொண்ட பின்னரும் தொடர்ந்து இதே நிகழ்வு நடைபெறுகின்றபோது துன்பம் கொடுத்தவன் ஒரு கட்டத்தில் சோர்வுக்குள்ளாகி நல்லவனாய் மாற வழிவகுக்கும் என்பதே வள்ளுவர் தரும் வாக்குத்தத்தமாகும். தொடர்ந்து பொறையுடைமையில் 152 வது குறளில் ஒருவன் தரும் துன்பத்தைப் பொறுத்துக் கொள். அதை அப்போதே மறந்து விடு என்கிறார். மெய்யாகவே, 'வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே' என்னும் கூற்று போற்றுதற்குரியது.

**காலந்தவறாமை :**

காலம் மனித வளர்ச்சியின் உயிர் எனலாம். காலத்தை மிகச் சரியாகக் கணக்கிட்டு, வாழ்க்கை ஓட்டத்தை நடத்தக் கற்றுக்கொண்டோமெனில் நாமே வெற்றியாளன். இன்று செய்ய வேண்டிய பணியை இன்றே இப்போதே செய்து முடிக்காமல், நாட்களைக் கடத்தும்போது தோல்வி முகம் நம்மோடு தோழமை செய்ய ஆரம்பித்துவிடுகின்றது.

"பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது" (காலம் அறிதல் : 481)

காகம் தன்னைக் காட்டிலும் வலிமையுடையக் கோட்டானை, அதற்கு கண் தெரியாத பகல் பொழுதில் போரிட்டு வென்றுவிடும். அதுபோல பகைவருடன் போரிட்டு வெல்லக் கருதும் அரசர்க்கு ஏற்ற காலம் இன்றியமையாதது என்கின்றார். தொடர்ந்து,

ஒருவன் தக்க காலமறிந்து ஏற்ற இடம் அறிந்து, தான் செய்யும் செயலைச் செய்வானாயின் அவன் இவ்வுலகத்தையே ஆளக் கருதினாலும் அது கைகூடும் என்பதை,

"ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்" (காலம் அறிதல் : 424)

என்னும் குறள் வழி மெய்ப்பிக்கின்றார். காலம் அறிதலின் மேன்மை குறித்து தன்னம்பிக்கைக் கவிஞர் கவிதாசன் அவர்கள் தனது கவிதை வரிகளில்,

"நேற்று என்பது உடைந்த பானை
நாளை என்பது மதில்மேல் பூனை
இன்று என்பது கையில்உள்ள வீணை
இதனை உணர்ந்தால் தொட்டிடலாம் வானை"

இக்கவிதையில் நாளை என்பதை விடுத்து, காலத்தின் அருமை உணர்ந்து, இன்றே, இப்போதே மனதில் நிறுத்தி செயலாற்றும்போது வெற்றி நம்வாசற்படியில் கிடக்கும் என்பது திண்ணமாகிறது.

**முடிவுரை :**

திருவள்ளுவர் வகுத்த திருக்குறள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளக்கூடியது. அதனால்தான் இதற்கு உலகப் பொதுமறை என்ற சிறப்பு பட்டம் கிட்டியது. மனிதனின் நல்வாழ்வுக்கு வள்ளுவர் சொல்லாத விசயங்களே இல்லை எனலாம். வள்ளுவனாரின் சிந்தையில் உதித்து கைகளில் தவழ்ந்த இத்திருக்குறளை நன்கு படித்து அதன்படி வாழ முற்படுகின்றபோது, முழுநிறை மனிதனாக முடியும். அவர் வகுத்த அறம், பொருள், இன்பத்தைச் சுவைக்கும்போது உலகத்தாரால்,

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்" (இல்வாழ்க்கை : 05)

என்பது முற்றிலும் உண்மை.

உதவிப் பேராசிரியர் - தமிழ்த்துறை,
ஆறுமுகம் பிள்ளை சீதை அம்மாள் கல்லூரி,
திருப்புத்தூர்,
சிவகங்கை மாவட்டம்.